1971 டிசம்பர் 17]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : மேற்கண்ட அணைக்கட்டு கும்மிடிப் பூண்டி தொகுதியில் இருக்கிறது. இந்த அணைக்குப் பக்கத்தில் சீசா ஏரி இருக் கிறது. அந்த அணைக்கட்டிலிருந்து 20 ஏரிகளுக்குத் தண்ணீர் வருகின்ற நிலை இருக்கிறது. ஆனால் சீசா ஏரிக்குத் தண்ணீர் வர வழி இல்லை. மக்கள் அதை மிகவும் எதிர்பார்க்கிறார்கள். இப்போதாவது சீசா ஏரியை இணைக் கின்ற திட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : கும்மிடிப்பூண்டியில் இருக்கும் சீசா ஏரிக்கு நீர்ப்பாசனத்திற்காகத் தண்ணீர் அளிக்க தற்சமயம் காரணம் இல்லையென்று தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார். அணைக்கட்டின் மூலம் 20 குளங்கள் பயன் அடைவதாகச் சொன்னார்கள். பத்து குளங்கள் தான் பாசன வசதி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கும்முடிப் பூண்டி சீசா ஏரிக்கு ஆரணியாற்றிலிருந்து தண்ணீர் வசதி பெற உரிமையில்லை. ஆரணியாற்றிலிருந்து பாசன வசதி பெறும் ஆயக்கட்டுகள் 23,310 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

கோவை வேளாண்மைக் கல்லூரியில் குடிநீர் ஆய்வு

* 530 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்கள் கோவை விவசாயக் கல்லூரியிலேயே குடிநீர் பரிசோதனை செய்துகொள்ள அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : குடிநீரை ஆராய்ந்து பரிந்துரை வழங்குவது விவசாயத்துறையின் வரம்பிற்கு அப்பாற்பட்டதாகும். இதற் காக பொது சுகாதாரத் துறையின் ஆய்வுக்கூடம் ஒன்று கோயம்புத்தூர் நகரிலேயே உள்ளது. இவ்வாய்வுக் கூடம் நீலகிரி, கோவை, சேலம், தருமபுரி திருச்சி மாவட்டங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : ஊராட்சி மன்றங்கள் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்ட வேண்டுமென்றால் அதற்கு முன்னதாக அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய கிணற்றுத் தண்ணீரைக் கிண்டிக்கு அனுப்பி அவர்கள் பரிசோதித்து அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தலாம் என்று சொன்ன பிறகுதான் மேல் நிலைத் தொட்டி கட்ட முடியும். இப்போது தமிழ்நாடு முழுவதிலிருந்தும் கிண்டிக்கு வரவேண்டிய நிலை இருப்பதன் காரணமாக, கிண்டியில் தண்ணீரை ஆராய்ந்து முடிவு சொல்ல நீண்ட நாட்களை எடுத்துக் கொள்ளுவதன் காரண மாக வேலைகள் தடைப்படுகின்றன. ஆகவே, இந்த வேலைப் பளுவைக் குறைப் பதற்கு, கோவை, நீலகிரி, தருமபுரி, சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு கோவை விவசாயக் கல்லூரியில் இருக்கும் பெரிய ஆராய்ச்சி நிலையத்தைப் பயன்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நான் பயிர்ப் பாதுகாப்புக்காகச் சொன்னேன். கனம் உறுப்பினர் அவர்கள் உயிர்ப் பாதுகாப்புக்காகச் சொல்லுகிறார்கள். இது பொதுச் சுகாதாரத்துறை சம்பந்தப்பட்டது என் பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. கோவை. செழியன் : கிண்டியில் இருக்கும் ஆராய்ச்சி நிலையத்திற்குத் தண்ணீர் அனுப்பினால் இரண்டு, மூன்று வருஷத்திற்குப் பதிலே அனுப்புவ தில்லை. ஒருமுறை நானே நேரில் சென்று கேட்ட பின்னரும் அனுப்பாமல் இருந்ததற்குச் சொல்லும் காரணம் எம்.எல்.ஏ., வந்து கேட்டதால் அனுப்ப வில்லை என்ற முறையில் அந்த அதிகாரி சொல்லியிருக்கிறார். இதனால் பொது மக்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் இந்த முறையை எடுத்துவிட அர சாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : உரியவர்களிடத்தில் கேட்காத காரணத்தால் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை கனம் அங்கத் தினர் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். இதற்கு பொதுச் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் கிடைக்க வேண்டும். இது விவசாயத் துறையின் வரம்புக்கு அப்பாற்பட்டது என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. கோவை செழியன் : இந்தக் கேள்வியை மாற்றி வேறு ஒரு அமைச் சருக்குப் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்குதான் போட்டிருக்கிறது.

உவர் நிலங்கள்.

* 531 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உவர் நிலங்களைப் பயன்தரும் விளை நிலங்களாக மாற்றுவதற்கு, அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் தீட்டியுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) : சட்டமன்றப் பேரவையின் முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : இந்த விவர அறிக்கையில் கோவை, தருமபுரி மாவட்டங்களில்தான் இந்தத் திட்டம் நடைமுறையில் இருப்பதாகக்கூறப் பட்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தை தமிழகம் முழுமைக்கும் பயன் படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழகத்தில் எல்லா இடங்களிலும் உவர் நிலங்கள் இல்லை என்பதை உறுப்பினர் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். எங்கெங்கு உவர் நிலங்கள் இருக்கின்றனவோ அங்குதான் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

* 532 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a Council to study Salinity in soils; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

@ 317-318-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.